இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

சமூகவிஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி - மட்டம் I,

இறுதிப் பரீட்சை -2006

புவியியல் – SSF 1302

காலம் : மூன்று (3) மணித்தியாலங்கள்

திகதி : 25.11.2006 நேரம் : மு.ப. 9.00 – 12.00 வரை

முதலாம் (1) வினாவுக்கும் ஏனையவற்றில் நான்குக்கு (4) வினாக்களுக்கும் விடையளிக்குக.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு (1) வினாவையேனும் தெரிவு செய்க.

உலக புறஉருவப் படம் வழங்கப்படும்

1. உலகப்படத்தில் பின்வருவனவற்றை குறித்துப் பெயரிடுக.

   அ. அண்மைக்காலத்தில் இயற்கை அழிவுக்குட்பட்ட ஆசிய பிராந்தியத்தில் உள்ள பிரதான ஐந்து நாடுகள்

   ஆ. வடவரைக்கோளத்தில் நிலக்கரி அகழும் ஐந்து பிரதான நிலையங்கள்

   இ. மத்தியதரைக்கடல் காலநிலை நிலவும் நான்கு பிரதேசங்கள்.

   ஈ. பேர்லின் , கொப்பனேகன் , ஸ்ரோக்கம் , சுப்பீரியர் ஏரி , வோல்கா நதி.

   (20 புள்ளிகள்)

## பகுதி – 1

2. அ. மனிதனுக்கும் சூழலுக்குமிடையிலான தொடர்பினை சுருக்கமாக விளக்குக. (05புள்ளிகள்)

   ஆ. சூழலாதிக்கவாதத்தின் பண்புகளை விளக்குக. (15 புள்ளிகள்)

3. எதிர்கால நுகர்வு அமைப்புத் தொடர்பாக வள முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக. (20 புள்ளிகள்)

4. பின்வரும் தலைப்புக்களில் இரண்டிற்கு (2) சிறுகுறிப்பு எழுதுக

   அ. புராதனகால விவசாய முறை

   ஆ. நாடோடி மந்தை வளர்ப்பு

   இ. அழிவடையும் வளங்கள்

   ஈ. பாற்பண்ணைகள் (10x2=20 புள்ளிகள்)

## பகுதி – 2

5. ஆசியப் பிராந்தியங்களில் நெற்செய்கை விவசாயிகள் அவர்களது உற்பத்தியை உச்சப்படுத்துவதில் எதிர்நோக்கும் சவால்களை விளக்குக. (20 புள்ளிகள்)

6. (அ) உலகில் பிரதான மூன்று வகையான வர்த்தக மீன்பிடித் தொழில்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

   (ஆ) இவற்றில் ஏதாவது இரண்டு பிரதான மீன்பிடித்தொழில் வகையின் குணவியல்புகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (17 புள்ளிகள்)

7. (அ) பிரதான அயனவலய பெருந்தோட்ட விவசாய பயிர் நான்கினைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

   (ஆ) இதில் ஏதாவதொரு பெருந்தோட்ட விவசாயப் பயிரினைத் தெரிவு செய்து அயன வலயத்தில அதன் வளர்ச்சி, அமைப்பு பற்றி விளக்குக. (16 புள்ளிகள்)

## பகுதி 3

8. (அ) உலகில் சனத்தொகைச் செறிவு குறைந்த பிரதேசங்கள் எவை? (04 புள்ளிகள்)

   (ஆ) இதில் ஒன்றைத் தெரிவு செய்து இந்நிலைமைக்குப் பங்களிப்புச் செய்த காரணிகளை ஆராய்க. (16 புள்ளிகள்)

9. வர்த்தகத்தில் போக்குவரத்தின் விளைவுகளை உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)

10. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பிரதான நகரங்களில் சனத்தொகை அழுத்தத்தினைக் குறைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக. (20 புள்ளிகள்)

*** பதிப்புரிமையுடையது ***

The Open University of Sri Lanka
Certificate Course in Social Sciences - Level 1
Final Examination - 2006
Geography - SSF 1302
Reg. No. ..............................

